


**26.9.2024**

**தலைப்புச் செய்திகள்**

**1.** ஜம்மு காஷ்மீரில் வரும் ஒன்றாம் தேதி நடைபெறும் 3ஆவது இறுதி கட்ட வாக்குப்பதிவிற்காக பிஜேபி மூத்த தலைவர் திரு.அமித்ஷா இன்று அங்கு தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

2. எ.்.கு தொழிற்சாலைகளில் கரியமிலவாயு வெளியேற்றத்தை குறைக்கும் வகையில் பசுமை திட்ட பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மத்திய அமைச்சர் திரு.H.D. குமாரசாமி தெரிவித்துள்ளார்.

**3.** கோவை, வட சென்னை ஒசூர் பகுதிகள் நவீன தொழில்நுட்ப நகரங்களாக மேம்படுத்தப்படும் என்று மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் கூறியுள்ளார்.

**4.** சட்டவிரோத பண பரிமாற்ற வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு உச்சநீதிமன்றம் இன்று ஜாமீன் வழங்கியுள்ளது.

**5.** சர்வதேச சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் ராம்குமார் ராமநாதன் இணை - ஸ்பெயின், அர்ஜென்டினா இணையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

**இனிவிரிவான செய்திகள்**

**********

**தேர்தல்**

ஜம்மு காஷ்மீரில் 40 தொகுதிகளுக்கு 3ஆவது மற்றும் இறுதி கட்ட வாக்குப்பதிவு வரும் ஒன்றாம் தேதி நடைபெறுவதை ஒட்டி அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான திரு.அமித்ஷா கத்துவா, உத்தம்பூர் உள்ளிட்ட பகுதிகளில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டங்களில் இன்று உரையாற்றுகிறார்.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி நாளை மறுநாள் ஜம்முவில் தமது கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பரப்புரை மேற்கொள்கிறார்.

முன்னதாக மக்களவை எதிர்கட்சி தலைவரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான திரு.ராகுல்காந்தி ஜம்முவில் தமது கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக நேற்று வாக்குகளை திரட்டினார்.

மக்கள் ஜனநாயக கட்சி தலைவர் மெஹபூபா முஃப்தியும் தமது கட்சி வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரித்து வருகிறார்.

இதனிடையே ஹரியானா மாநிலத்தில் மொத்தமுள்ள 90 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான ஒரே கட்ட வாக்குப்பதிவு

அடுத்த மாதம் 5ஆம் தேதி நடைபெறுவதை ஒட்டி அங்கும் அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

**********

**குடியரசு தலைவர்**

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு லடாக்கில் உள்ள சியாச்சின் அடிவார முகாமில் ராணுவத்தினருடன் இன்று கலந்துரையாடுகிறார்.

முன்னதாக டாயிஸ் விமான தளம் சென்றடைந்த குடியரசு தலைவரை லடாக் துணை நிலை ஆளுநர் பி.டி.மிஸ்ரா வரவேற்றார்.

**********

**H.D. குமாரசாமி**

எ:.கு தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கரியமிலவாயுவை குறைக்கும் வகையில் பசுமை திட்ட பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மத்திய எ:.கு கனரக தொழில்துறை அமைச்சர் திரு.H.D. குமாரசாமி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் அன்னையின் பெயரில் மரம் நடும் நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 2030ஆம் ஆண்டிற்குள் கரியமில வாயு வெளியேற்றம் இல்லா நிலை உருவாக்கப்படும் என்ற பிரதமரின் அறிவிப்பை சுட்டிக்காட்டினார்.

காலநிலை மாற்றம் தொடர்பான பாரீஸ் ஒப்பந்த இலக்குகளை விரைந்து எட்ட இது வழிகோலும் என்றார்.

**********

**நிர்மலா சீதாராமன்**

உஸ்பெகிஸ்தான் நாட்டுடன் டிஜிட்டல் தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, செயற்கை நுண்ணறிவு, மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் வர்த்தகம், முதலீட்டிற்கான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அரசு முறை பயணமாக உஸ்பெகிஸ்தான் சென்றுள்ள நிதியமைச்சர் அந்நாட்டு அதிபர் Shavkat Mirziyoyev-உடன் இதுதொடர்பான ஆலோசனைகளை மேற்கொண்டார்.

தமது உஸ்பெகிஸ்தான் பயணம் பயனுள்ள வகையில் அமைந்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

பசுமை தொழில்நுட்பம், காலநிலை மாற்றம் தொடர்பான உஸ்பெகிஸ்தானின் பணிகளை அவர் பாராட்டினார்.

**********

**அருணிஷ் சாவ்லா**

மருந்து தொழில்நுட்பம் மற்றும் மருந்தியல் நிறுவனங்கள் தொழிற்சாலைகள் மூலம் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் அதிகரித்து வருவதாக மருந்தியல் துறை செயலர் திரு.அருணிஷ் சாவ்லா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் வருடாந்திர மருந்தியல் உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், நம் நாட்டின் 4ஆவது பெரிய ஏற்றுமதி துறையாக மருந்தியல் துறை திகழ்கிறது என்றார்.

சென்ற ஆண்டு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 50 சதவிகிதத்திற்கும் அதிகமான மருந்துகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், வருங்காலங்களில் இத்துறையில் அதிக வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் நம் தேசத்தை ஆற்றல் மிகு உற்பத்தி மையமாக மேம்படுத்தி இருப்பதாகவும் இதில் மருந்து தொழில்நுட்ப நிறுவனங்கள் பெரும் பங்காற்றுவதாக அவர் எடுத்துரைத்தார்.

**********

## மருந்து தர கட்டுப்பாடு

நாட்டில் 50க்கும் மேற்பட்ட மாத்திரைகள் தரமற்றவை என மருந்து தர கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

பல மருந்து நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் paracetamol, Vitamin B Complex, calcium, Vitamin D3 உள்ளிட்டவையின் தரத்தில் குறை இருப்பதாக இந்நிறுவனம் அறிவித்துள்ளது.

**********

## முதலமைச்சர்

தமிழக அரசின் நல திட்டங்களுக்காக மத்திய நிதியை பெறுவதற்காக முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் இன்று மாலை புதுதில்லி புறப்படுகிறார்.

இதுதொடர்பாக பிரதமர் திரு. நரேந்திரமோடியை நாளை அவர் சந்தித்து பேசவுள்ளார்.

**********

**பழனிவேல் தியாகராஜன்**

கோவை வட சென்னை ஒசூர் பகுதிகளை அதி நவீன தொழில்நுட்ப நகரங்களாக மாற்றுவதற்கான பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் கூறியுள்ளார்.

கோவை விளாங்குறிச்சி பகுதியில் தகவல் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டல வளாகத்தில் 114 கோடியே 16 லட்ச ரூபாய் செலவில் புதிய கட்டிடத்தை இன்று ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பணிகள் முழுவதும் நிறைவடையும் என்றார்.

சிறு குறு தொழில் நிறுவனங்கள், புதிய தொழில்முனைவோருக்கு இதில் வாய்ப்பு வழங்கப்படும் என்றும் மூன்றாயிரத்து 200 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் எனவும் அமைச்சர் கூறினார்.

**********

**தமிழ்நாடு வேளாண்**

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தில் மாநில அளவிலான மாபெரும் உழவர் தின விழா கண்காட்சி இன்று தொடங்கியது.

இக்கண்காட்சியை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாநில வீட்டுவசதி துறை அமைச்சர் திரு.முத்துசாமி விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் இம்மாநாடு அமையும் என நம்பிக்கை தெரிவித்தார்.

வரும் 29ஆம் தேதிவரை நடைபெறும் இக்கண்காட்சியில் 300க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப வேளாண் விளைச்சல், செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்பம், சிறுகுறு விவசாயிகளுக்கான வங்கி கடன் குறித்து இதில் விளக்கமளிக்கப்பட உள்ளன.

இதில் 6 விவசாயிகளுக்கு வேளாண் விருதுகள் வழங்கப்பட உள்ளன.

**********

**பெரியகருப்பன்**

தமிழ்நாட்டில் மாணாக்கரின் கல்வி திறனை மேம்படுத்தும் வகையில் பல்வேறு சிறப்பு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்ட பள்ளி மாணாக்கர் 780 பேருக்கு விலையில்லா மிதிவண்டிகை வழங்கி பேசிய அவர் மாணாக்கர் இத்திட்டங்களை முறையாக பயன்படுத்தி தங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**********

**செந்தில்பாலாஜி**

சட்டவிரோத பண பரிமாற்ற வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜிக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி உச்சநீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு நேரில் சென்று கையெழுத்திட வேண்டும் உட்பட பல்வேறு நிபந்தனைகளுடன் அவர் ஜாமீனில் விடுவிக்கப்படுகிறார்.

சட்டவிரோத பண பரிமாற்ற வழக்கில் அமலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்டு கடந்த 15 மாதங்களாக புழல் சிறையில் உள்ள அவர் இன்றுமாலை அல்லது நாளை காலை சிறையிலிருந்து விடுவிக்கப்படுவார் என தெரிகிறது.

**********

## உறுதிமொழி குழு

திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை தமிழக அரசின் உறுதிமொழி குழுவினர் அதன் தலைவர் திரு.வேல்முருகன் தலைமையில் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

வண்ணாங்கோயில் பகுதியில் அமைந்துள்ள தேசிய சட்டக்கல்லூரி அருங்காட்சியகம்,

கி.ஆ.பெ விஸ்வநாதம் மருத்துவமனை,

சத்திரம் பகுதியில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையம், உள்ளிட்டவற்றை இக்குழுவினர் ஆய்வு செய்தனர்.

**********

## தூய்மையே சேவை

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் மக்கள் தொடர்பகம் திருச்சி கள அலுவலகம் சார்பில் தூய்மையே சேவை ஒருங்கிணைந்த சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம் தேவராயநேரியில் இன்று காலை நடைபெற்றது.

தூய்மை பாரத விழிப்புணர்வு உறுதிமொழி இதில் ஏற்கப்பட்டது.

சுகாதாரத்தை பராமரிப்பதாக தேவராயநேரியை சேர்ந்த பெண் ஒருவர் பேசுகையில்:

**வாய்ஸ்**

**********

**நாமக்கல் தூய்மையே சேவை**

நாமக்கல் மாநகராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கான மருத்துவ முகாமை ஆட்சித்தலைவர் டாக்டர் உமா இன்று துவக்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர் தூய்மையே சேவை இயக்கத்தின் கீழ் தூய்மை பணியாளர்களின் ஆரோக்கியம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

**வாய்ஸ்**

**********

**மதுரை வாய்ஸ்**

மதுரையில் தமிழ்நாடு ஸ்டார்ட் அப் திருவிழா நாளை மறுநாள் முதல் இரண்டு நாட்கள் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி சங்கீதா தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

**********

**இருவரி**

**கன்னியாகுமரி மாவட்டத்தில் கோ ஆப்டெக்ஸ்** தீபாவளி சிறப்பு விற்பனையை ஆட்சித்தலைவர் திருமதி அழகுமீனா இன்று தொடங்கிவைத்தார்.

மாவட்டத்தில் உள்ள 4 விற்பனை நிலையங்களிலும், 5 கோடி ரூபாய் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

**இதேபோல் தேனி மாவட்டத்தில் 30 சதவிகித** சிறப்பு தள்ளுபடி விற்பனை இன்று துவங்கியுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி சஜீவனா தெரிவித்துள்ளார்.

**தர்மபுரி மாவட்டத்தில் தற்காலிக பட்டாசு** கடைகள் அமைக்க விரும்புவோர் அடுத்த மாதம் 25ஆம் தேதிக்குள் இணையதளம் வாயிலாகவோ அல்லது இ-சேவை மூலமாகவோ விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி சாந்தி தெரிவித்துள்ளார்.

**அரியலூர் மாவட்டத்தில் வரும் 28, 29** தேதிகளில் நடைபெற இருந்த பள்ளி மாணாக்கருக்கான அறிஞர் அண்ணா சைக்கிள் போட்டிகள் மற்றும் மாரத்தான் போட்டிகள் நிர்வாக காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

இதற்கான தேதிகள் பின்னர் அறிக்கப்படும் என்றார்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் தனியார்துறை** வேலை வாய்ப்பு முகாம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நாளை மறுநாள் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் நாட்டுப்புற** கலைஞர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் அவர்களின்

கோரிக்கையின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டு வருவதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

**********

**********

**டென்னிஸ்**

பாங்காக்கில் நடைபெறும் சர்வதேச சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதியில்

இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், ஜப்பானின் **Toshihide Matsui** இணை – ஸ்பெயினின் **Alejandro Moro Canas,**

அர்ஜென்டினாவின் **Marco Trungelliti-**இணையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

**********

**பேட்மிண்டன்**

Macao ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் கிடாம்பி ஸ்ரீகாந்த் - Ayush Shetty ஐ இன்று எதிர்கொள்கிறார்.

மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் காயத்ரி கோபிசந்த், ட்ரீசா ஜாலி இணை – தைவான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

**********

**கிரிக்கெட்**

**ஐ.சி.சி மகளிர் உலக கோப்பை 20-20 கிரிக்கெட்** போட்டிகள் ஷார்ஜாவில் வரும் 3ஆம் தேதி தொடங்குகின்றன.

இந்தியா தனது முதல் போட்டியில் துபாயில் வரும் 4 ஆம் தேதி நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

இறுதிபோட்டி அக்டோபர் 20ஆம் தேதி நடைபெறும்.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

**********